1973 நவம்பர் 29]

தோக்கமூர் ஊராட்சி பர்மா குடியிருப்பில் தெரு விளக்குகள்

*500 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், தோக்கமூர் ஊராட்சியில் உள்ள பர்மா காலனிக்குத் தெரு விளக்குகள் அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பர்மாகுடியிருப்பு, சென்னை, மின்வசதி ஏற்பாட்டின் சிறப்புத்திட்டம் நிறைவேற்றப்பட்ட 1971-ம் ஆண்டிற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட புதியதொரு குடியிருப்பாகும். பர்மா குடியிருப்புக்கும் சேர்த்து 16 தெரு விளக்குகள் அமைக்குமாறு கேட்டு செல்வநிலைச் சான்றிதழுடன் (Salvancy Certificate) தோக்கமூர் ஊராட்சித் தலைவர் 1972-ம் ஆண்டு மார்ச் திங்களில் விண்ணப்பம் செய்தார். இத் திட்டத்தின் மூலம் 9.3 சதவீத வருவாயே கிடைக்குமாதலால் இத்திட்டம் ஆதாயம் தரத்தக்கதாக இல்லையென்று தெரிய வந்தது. எனவே, வேளாண்மைப்பணிகள் உட்பட இணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் தற்போதுள்ள 5 சாதாரண விளக்குகளை ஒளி உமிழும் குழல் விளக்குகளாக மாற்றுவதும் சேர்க்கப்பட்டிருந்தது. திருத்தியமைக்கப்பட்ட செல்வநிலைச் சான்றிதழ் ஒன்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால், 1972-ம் ஆண்டு நவம்பர் திங்களில் கொடுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த மாத இறுதிக்குள் விளக்குகள் போடுவதாயும், தற்போது தமிழ் நாடு மின்வாரியம் தெரிவித்துள்ளது. பணிகள் நடந்து கொண்டிருப்பதாக மாவட்ட ஆட்சியாளரும் தெரிவித்துள்ளார்.

மணல்மேடு-வக்காரமாரி சாலை

*501 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மணல்மேட்டிலிருந்து வக்காரமாரி வரை செல்லும் பாதையைச் செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.